# Official Visit of President of the Republic of Maldives to India (August 01–04, 2022)

---

## மாலத்தீவு அதிபர் அவர்களின் அரசுமுறைப் பயணம் (ஆகஸ்ட் 01–04, 2022)

ஜூலை 28, 2022

நமது பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் அழைப்புக்கு இணங்க, மாலத்தீவு அதிபர் மாண்புமிகு இப்ராஹிம் முகமது சோலி அவர்கள் 2022 ஆகஸ்ட் 01 முதல் 04 வரை அரசுமுறைப் பயணமாக இந்தியா வரவிருக்கிறார். ஜனாதிபதி சோலிஹ் அவர்களுடன் அந்நாட்டின் உயர்மட்ட அதிகாரி மற்றும் வர்த்தக பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழுவும் வருகிறார்கள்.

இந்த பயணத்தின்போது, ஜனாதிபதி சோலி அவர்கள் நமது ஜனாதிபதியை சந்திக்கவுள்ளார், மேலும் நமது பிரதமர் மற்றும் வெளிவிவகாரத் துறை அமைச்சரையும் சந்தித்து பேசவுள்ளார். அரசுமுறை சந்திப்புகளைத் தவிர, ஜனாதிபதி சோலிஹ் அவர்கள் டெல்லியில் ஒரு இந்திய வர்த்தகக் குழுவுடன் கலந்துரையாடவுள்ளார் . இந்த பயணத்தின் போது, ஜனாதிபதி சோலி அவர்கள் மகாராஷ்டிராவின் மும்பையில் நடைபெறும் வர்த்தக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள இந்தியாவின் முக்கிய அண்டை நாடான மாலத்தீவு, இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையில் சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது. சமீப காலமாக, இந்த இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு காரணமாக பல்வேறு துறைகளிலும் விரைவான வளர்ச்சியை எட்ட முடிந்தது. இருநாடுகளுக்கும் இடையிலான பல்வேறு கூட்டாண்மையில் இதுவரை கண்டுள்ள முன்னேற்றத்தைக் குறித்து விவாதிக்கவும் அதை மேற்கொண்டு அதிகரிக்கவும் மாலத்தீவு அதிபர் சோலியின் இந்த பயணம் இருநாட்டு தலைவர்களுக்கும் ஒரு வாய்ப்பை வழங்கும்

**புது டெல்லி**
**ஜூலை 28, 2022**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.